# செந்தமிழ்

தொகுதி: 92 சூலை 1998 பகுதி: 7

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல்<br>முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | செ. கந்தசாமி<br>முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ. தட்சிணாமூர்த்தி<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர் |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி<br>செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர். |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன்<br>முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| பேரறிஞர் | சி. கதிர் மகாதேவன்<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம். |
| பேராசிரியர் | கு. துரைராசு<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ.அ. மணவாளன்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன்<br>திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி. |
| பேராசிரியர் | ந. பொன்னப்பன்<br>மதுரைக் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி. பத்மா சீனிவாசன்<br>ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | ந. மாணிக்கம்<br>தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால்<br>21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம். |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி<br>தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை. |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன்<br>தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ: 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

## பொருளடக்கம்

**1. தாய் மொழியை வளர்த்தல்** *224*
*ஊ.சா. வேங்கடராமய்யர்*

**2. எல்லோர்க்கும் தொல்காப்பியம்** *232*
பேரறிஞர் நா. பாலுசாமி
*(மதிப்புறு பேராசிரியர், உயர் ஆய்வு மையம், மதுரைத் தமிழ்ச் சங்கம்)*

**3. சிறியகள், பெரியகள் - ஒரு சிந்தனை** *244*
*வித்துவான் க.கதிரேசன், குன்றக்குடி.*

**4. மக்கள் நல அரசு** *248*
*நாபா, மதுரை.*

**5. நாவின் சோம்பல்** *256*
*புலவர். மா. சின்னு, சேலம்.*

# தாய்மொழியை வளர்த்தல்

- ஊ.சா.வேங்கடராமய்யர்

(இது செந்தமிழில் மார்ச்சு-ஏப்ரல் 1924-இல் வெளி வந்தது)

இத்தலைத்தொடர், 'மொழி என்பது யாது? தாய்மொழி என்பதன் பொருள் என்னை? நமது தாய்மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? ஏன் வளர்த்தல் வேண்டும்? வளர்க்காவிடில் வரும் இழுக்கென்னை? வளர்த்தலால் வரும் பயன் யாது? என்ற பல பகுதிகளாக்கிக் கூறுவதால் ஒரு வகையாக விரித்துரைக்க படலாம். ஆதலின், அம்முறையிற் சிறிது கூறுவேன்.

## மொழி

இது, மக்களாவார் ஒருவர் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக்கருத்துக்களைத் தாம் உணர்வது மாத்திரம் அன்றித் "தாமின்புறுவ துலகின் புறக்கண்டு - காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி. பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச் செய்யும் பெருமையினை ஒவ்வொருவருக்கும் தரவல்லது; செவிப்புலனாம் அணுவாகிய ஒலி நுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படுவது.

## தாய்மொழி

உலகம் பலவேறுநாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக் கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்து கொள்ள வேண்டியதும் இன்றியமையாததொன்றாம். ஆதலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம் தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர். அளவளாவத்தக்க வகையில் தனித்தனி

மொழிகளைப் படைத்துக் கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக் கொண்டமொழியே அந்த அந்த நாட்டினர்க்குத் தாய்மொழியாவது, இதனை நாட்டுமொழி, நிலத்துமொழி என்றும் தேச பாஷை என்றும், கூறுவர். இதனை, "நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்று வந்தது; இன்பிலும் துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது" எனக் கூறிச் சிறப்பிப்பர் அறிஞர். "தாய்மார்கள் இயல்பாகப் பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்" என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினார் மகாத்மா காந்தி அடிகளும்

## நமது தாய்மொழி

நாம் என்ற சொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத் தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம்; எனினும், இங்கு, யான் இதற்குக் கொண்ட பொருள் 'தண்டமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். கடவுளருளால் நமக்குத் தாய்மொழியாக அமைந்துள்ளது. "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" எனச் சிறப்பிக்கப்பெற்ற செந்தமிழ் மொழியாம் என்பதும் போதரும்.

## தமிழ்மொழியின் தொன்மையும், மேன்மையும்

செந்தமிழாம் தெய்வமணங்கமழும் நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளிய நடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது, நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மரபு நிலை திரியாது எவரையும் இனிது உணர்ந்து கொள்ளச் செய்ய வல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலுந்தோறும் புதுப்புதுக் கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் ஆகிய தொல்காப்பியம் முதலிய பல திறப்பட்ட இலக்கண நூல்களையும்; இயற்கையின் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப் புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினாருடைய

அரிய சரித்திரங்களை வரலாற்று முறையுடன் அறியத் துணை செய்யக் கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத் தொகை நூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில்விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்திவருவதும், வடமொழி ஆங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக் கொள்ளும் பெருமையினைப்பெற்றதும், எம்மதத்தினரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள்போன்ற பல நீதி நூல்களையும்; புதுப்புதுக் கற்பனைகள் நிறையப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம்• போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறு கூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர்புராணம் போன்ற தனித்தமிழ்ச் சரித நூல்களையும்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும் 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினாற் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிர்க்கூச் செறிந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும் வண்ணம் செய்துவருவனவும், பத்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பெருக்கெடுத்து வெள்ளம்போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், திருவருட்பா போன்ற அருளிச் செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதி நூல்களையும்; இலக்கணங்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல கற்றற்குத் துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிவுகளையும், கருத்துக்களையும் தம்மகத்துக் கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்றுமுறைப்படி எளிதிற் புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம் போன்ற பல சிறு காப்பிங்களையும்; தண்டமிழ் மூதாட்டியாம் ஔவையின் பலதிறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞான நூல்களையும்; மருத்துவ நூல்களையும், சோதிட நூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழி பெயர்த்துச் சேர்த்துக்

கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது தன்னைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் அரசரையும்; பல ஜமீந்தார்களையும்; பலமடாதிபதிகளையும்; பல நூறு பெரும் பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இருநூறுலட்சம் மக்களையும்; பல தர்மஸ்தாபனங்களையும்; பலகழகங்களையும்; பல ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம் மும்முறை வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை, ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப் பலதுறைகளிலும் காலத்திற்கேற்றவாறு உயர்த்துகின்ற பல பத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன் பெருமை? அஃது இவ்வளவோடுநில்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமைபொருந்திய, உலகவழக்கிலுள்ள, பேசுமொழியாகவும் இருக்கின்றது. இங்கு, இதைப்பற்றிப் பன்னிப்பன்னிப் பல கூறலாம்., எனினும், அங்ஙனம் மிகைபடக் கூறாது, இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920)களுக்கு முன்னர்த் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சென்னை மாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டத்தில் அதன் வரவேற்புக் கழகத்தலைவர், ஆண்டுக் குழுமிய புலவர் பலர்க்கும் நல்வரவு கூறுகையில் மொழிந்தவற்றுள், சிலவற்றைக் குறிக்கிறேன். அவை வருமாறு:

"நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொரு பழங்காலத்திலேயே ஒரு சீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடையோர் எனப்படும் பயிலோயினர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மையை நோக்கின் தமிழை வென்றவர்களல்லர், உலகந்தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரையும் மலைக்கச் செய்வதும், ஈடும் எடுப்பும் அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது என யாவராலும் ஒப்ப வியந்து கூறப்படுவதும் ஆன பேரிமைய மலையும் தோன்றுதற்கு முன்னரே தான் தோன்றித் தனிச் செங்கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராயவல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்து கிடக்கும் தென்னாழி முழுதும் நிலப்பரப்பாய் விரிந்திருந்த

ஞான்று அந்நிலப்பரப்பில் வழங்கி வந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்து கிடந்த பெருநிலப் பகுதிதான் இவ்வுலகத்து முதன் முதல் தோன்றிய நிலப் பகுதியென்றும், அந்நிலப் பகுதியிலேதான் மக்கள் முதன் முதலில் தோன்றினார்களென்றும், இப்பொழுதுள்ள பழங்கலைப் புலவர்கள் பலரும் அறிவிக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந்தமிழ்மொழியே கைக்குறியாற் கருத்தை விளக்கி வந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதன்மொழி என்பது பெறப்படுகின்றது. இப்போதுள்ள மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச் சொற்களுக்கு இயைந்தனவாயிருப்பதும், செவ்வையுறாத சில மொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச் சொற்களுக்கும், தமிழின் அமைப்புக்கும்) மிகநெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும், தமிழ் ஒலிகள் இயற்கை ஒலிகளுக்கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளைக் குறிக்கும் பல தமிழ்ச் சொற்கள் மக்களது அறிவு வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு காலத்தில் அவர்கள்கண்ட அப்பொருளினது ஒவ்வொரு தன்மையைத் தனித்தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பதும் மொழி ஆராய்ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையையும் விளக்கி (அன்னாரை) மகிழ்விப்ப ஆகும்" இஃதொன்றே ஈண்டைக்கு இப்பகுதியை விளக்கப் போதியதாம்.

### *வளர்த்தல்*

இந்நிலையில் "நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்ட பழமைவாய்ந்ததும்,' 'அயலாய் உள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலிகளைப் பெற்றிருப்பதும், வேறு பல சிறப்புக்களையுடையதும் ஆகிய நமது மொழி, ஏன் தாழ்ந்த நிலைமையை அடைதல்வேண்டும்" என்று ஒருசிலர் குறிப்பாக வினவலாம். அங்ஙனம் வினவப்படின் அவர்க்கு "இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒரு மொழி தனது இயற்கையான உயர்ந்த நிலைமையிலிருந்து தற்பொழுது தாழ்ந்த நிலைமைக்கு வந்திருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை; அன்றியும், அது (நமது மொழி) சில நூற்றாண்டுகளாக - ஏன், பல நூற்றாண்டுகளென்றே சொல்லப்படலாம் கால

வேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய . பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்கு வந்துளது; அதனால், அக்குறையை நமது மொழியின் மேல் ஏற்றமுடியாது; ஆனால், அது இத்துணைக்காலம் காப்பார்அற்று இருந்தும் இன்னும் உயிருள்ள, உலக வழக்கிலுள்ள, பேசுமொழியாக இருப்பதே அதன் மிக உயரிய மேன்மையை வலியுறுத்துவதாகும்" எனக்கூறலாம். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும் தமது பழைய பெருமையைச் சொல்லிக் கொள்வதால் அன்னார்க்கு வரக்கூடிய நன்மை ஏதும் இன்று; அஃது அறிவுடையோரது பெருநகைப்புக்கே இடனாகும்; அன்றியும், அது, மடியாளர் செய்கையுமாம் ஆதலின், நாம் நமது மொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன்பெறும் வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயல வேண்டுவதே நமது முதற் கடமையாகும். ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார் முதலில் அதன் கண்ணுள்ள குறைபாட்டைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். குறை - இன்றியமையாமை, இம்முறையில் அடுத்தபடியாக கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலியவற்றால் நமது தற்கால உலகவாழ்க்கைக்கு வேண்டுவன முன்னிலும் பலவாகப் பெருகிவிட்டன. அவை இவை இவை என்பதைத் தெரிந்து கொள்வதற்கும். அவற்றை அடைவதற்கும் துணை புரிவனவாகப் பல கருத்துக்களையும், வழிகளையும் நாம் பிற மொழிகளிலுள்ள நூல்களால் அறிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். நம்முடைய பண்டைச் சரிதங்களே இன்னும் நம்மால் வரன்முறையாக எழுத்தப்படவில்லை. இஃது ஒரு மறுக்க முடியாத பெருங்குறையல்லவா? இங்கு எடுத்துக் காட்டாகத் "தமிழ் நாட்டுத்தெற்கெல்லையாகப் பண்டைச் சான்றோர் பலரும் குறித்துச் செல்லும் குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் இருந்தன என்று ஒரு சாராரும், இருந்ததில்லையெனப் பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; மூச்சங்கங்கள் இருந்தன என்று ஒரு சாராரும், அங்ஙனமன்று சங்கம் ஒன்றே விட்டு விட்டுத் தொடர்ந்து வந்தது என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; தமிழ்மொழிமாட்டுச்

சிறப்பாகப் பயின்றுவரும் அகம், புறம் என்பன தனித்தமிழ் வழக்கேயன்றி ஆரியர் வழக்காகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளைப் பற்றிய வழக்கன்று என்று ஒரு சாராரும், அவ்வழக்குப் பற்றியனவே என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; இங்ஙனமே, திருக்குறள் போன்ற நீதிநூல்கள் அகம், புறம் என்ற தமிழ் வழக்குப்பற்றி எழுந்தன என்று ஒரு சாராரும், அறம் பொருள் இன்பம் வீடு என்ற ஆரியர் வழக்குப்பற்றி எழுந்தன என்று பிறிதொருசாராரும் கூறுவனவற்றையும்; இவைபோன்ற பிற பலவற்றையும் ஆராய்ந்து உண்மை காணவேண்டுவது தண்டமிழ்ச்சரித வளர்ச்சிக்கு இன்றியமையாதன எனக்கூறலாம். சின்னாட்களாக ஆங்காங்குச் சிற்சில அறிஞர்கள் இத்துறையில் இறங்கி நாட்டிற்கும், மொழிக்கும் நன்மையைச் செய்து வருவது நம்மனோராற் பெரிதும் போற்றத் தக்கதே. எனினும், நமது சிறார்களும் உலகியல்களை நன்கு எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் உலகநூல், உயிர்நூல், உடல்நூல், செல்வநூல், நிலநூல், ஒளிநூல், ஒலிநூல், வானநூல், அறிவுநூல் போன்ற பற்பல நூல்கள் பலப்பல மொழிகளினின்றும் நமது மொழியில் இன்னும் மொழி பெயர்க்கப்பட வேண்டாமா? வடமொழியிலுள்ள 'சப்தகல்பத்ருமம்' 'வாசஸ்பத்யம்' போன்றனவும், ஆங்கிலத்திலுள்ள 'என்ஸைகிளோபீடியா பிரிட்டானிகா' 'வெப்ஸ்டர்ஸ்' போன்றனவும் ஆகிய ஒரு போகராதி நமது தாய்மொழியாம் தண்டமிழ் மொழியில் இருக்க வேண்டியது இன்றியமையாததொன்றல்லவா? ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் அவ்வம் மொழியாளர்கள், தத்தம் மொழியில் வல்லுநாயிருந்த ஷேக்ஸ்பியர் (இவர் வங்க தேசத்தறிஞர்களில் ஒருவர் எனச் சிலரால் கருதப்படுகின்றனர்) போன்ற மகாகவிகள் இயற்றிய நூல்களைப் புத்தகசாலைப் பதிப்பு என்றும், சாதாரணப் பதிப்பு என்றும் வெளியிட்டுப் பார்ப்போர்களுடைய கண்களைக் கவருமாறும், எவர்க்கும் எளிதிற் கிடைக்குமாறும் செய்கின்றார்களே. அத்தகைய நிலைமை நமது பண்டைச் சான்றோர்கள் இயற்றியருளிய தண்டமிழின் மேலாம் தரங்களாகிய பெறலரும் நூல்வாய், எவரையும் எளிதில் அறிவுறுத்தத்தக்கனவாய், நாடோடியாகத் திரியும் பிச்சைக்காரர்களிடமே தங்கி உருமாறியிருப்பனவாய் உள்ள பலபாக்களும் பழமொழிகளும் தத்தம் முன்னை

உருவங்களுடன் வெளிப்படுத்தப்படுதல் வேண்டாமா? அங்ஙனமே, இன்னும் நவநாகரிகம் தலைகாட்டாத சிற்றூர்களிலுள்ள பெண் பாலர்களிடத்திலும் சிறார்களிடத்திலும் தங்கியிருக்கின்ற தாலாட்டு விளையாட்டு முதலியன போன்ற பாடல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டாமா? விவசாயத்தைப் பற்றியும், கைத்தொழிலைப் பற்றியும், வியாபாரத்தைப் பற்றியும் நமது மொழியில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? சிற்பம், கணிதம் போன்ற கலைகளிலே பெரிதும் கவனஞ்செலுத்த விரும்புவோர்க்குத் துணை செய்யத்தக்க நூல்கள் நமது மொழியில் இருக்கின்றனவா? அரசியலைப் பற்றிய நூல்கள் போதிய அளவு நமது மொழிக்கு வேண்டுவதின்றா? இவற்றால் நமது மொழியை முன்னர்ப் புகழ்பவன் போற்காட்டிப் பின்னர்ப் பழிக்க வந்தவனாக என்னை நீங்கள் கருதி விடலாகாது. முற்காட்டிய குறைகளைப் போக்கத்தக்கனவாக ஆங்காங்குச் சிற்சில நூல்கள் வெளிவந்தும், வெளிவந்து கொண்டும் இருப்பதை நன்றாய்க் கூறுவேன், என்றாலும், அவை, நமது நாட்டின் பரப்பையும், நமது மொழியினைப் பேசுவோரது பெருக்கையும் நோக்கச் சிறிதும் போதாதன என்பதே எனது கருத்து. இது பற்றித்தான் அவற்றைக் குறை எனக் கூறியதும், ஆயினும், இக்குறையையும், நமது மொழிமாட்டு ஏற்ற முடியவில்லை. எங்ஙனமெனில், எந்நாட்டிலும், எந்தக் காலத்திலும், எந்த மொழியிலும் காலத்திற்கேற்ற பல திறப்பட்ட புதுப்புதுக் கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தாமாகவே தோன்றின என்று யாண்டும் கேட்கப்படவில்லை. அங்ஙனம் தோன்றவும் முடியாது. ஆனால், அவை பல தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது புதிது புதிதாக எழுதப் பெற்றே நாளடைவில் வளர்ந்து உயர் நிலையைப் பெற்று வருகின்றன என்க. இவற்றால், நமது மொழி பல துறைகளிலும் வளர்க்கப்பட வேண்டிய நிலைமையிலேயே இருக்கின்றது என்பதும், வளர்த்தல் இன்றியமையாததென்றாம் என்பதும் பெறப்படுகின்றன.

எவர் எவர், எவை, எவை, எப்படி எப்படி நமது மொழியை வளர்த்து வரல் வேண்டும் என்பதே இனிக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(தொடரும்)

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(தொல் - சொல் - வினை)

***சூத்திரம் 209*** (வழுவமைதி)

*அவற்றுள்*
*பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி*
*எண்ணியல் மருங்கில் திரிபவை உளவே*

(ப.ரை) அவற்றுள் - முந்திய சூத்திரங்களில் கூறப்பெற்ற இருபத்து மூன்று சொற்களுள், பன்மை உரைக்கும் - பன்மை குறிக்கும், தன்மை கிளவி - தன்மைச் சொற்கள், எண்ணியல் மருங்கில் - பிற பொருள்களை உளப்படுத்தி எண்ணும்போது, திரிபவை உள - உயர்திணையினின்று மாறுபடுதலும் உண்டு.

தன்மைப் பன்மை வினைமுற்றுச் சொற்கள் பிற பொருளை தன்னோடு உளப்படுத்தி எண்ணும்போது உயர்திணையாகமல் அஃறிணைச் சொற்களாகத் திரிவனவும் உள என்பதாம்.

(வி.ரை) அவற்றுள் - கிளவியாக்கம், வினையியல் ஆகியவற்றில் இதுவரை கூறப்பட்ட 23 சொல்லிறுதி எழுத்துக்கள் (அம்,ஆம்,எம்,ஏம் முதலியன). எண்ணியல் - எண்ணிக்கையாக வருமிடத்து, தன்மைப் பன்மைச் சொற்கள் உயர்திணைக்கே உரியன. அவை உயர்திணைப் பொருளையே உளப்படுத்தி வரும். ஆனால் இச்சூத்திரம் சில தன்மைப் பன்மைச் சொற்கள் அஃறிணைப் பொருளையும் உளப்படுத்தி வரும் என வழுவமைதி கூறுகிறது.

(எ.டு) "யானும் என் எஃகமும் சாறும்" - இவ்வாக்கியத்தில் யான் என்பது உயர்திணை; எஃகம் (யானை) என்பது அஃறிணை. இங்கே தன்மைப்பன்மை எஃகம் என்ற அஃறிணைப் பொருளை உளப்படுத்தி வந்துள்ளது. இவ்வாறு வருவது இலக்கணப்படி தவறு என்றாலும், தவறாகக் கருதாது இலக்கணம் உடையதாகவே கருதவேண்டும் என்கிறது இச்சூத்திரம். எனவே இது வழு (குற்றம்) அமைதி (குற்றமற்றது) எனக் கொள்ளப்படும். யானும் என் யானையும் பகைவரை வெல்வோம் என்பது கருத்து (சாறும் - சாலும், போதும், அமையும்).

## சூத்திரம் 210

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கில் முப்பாற்கும் உரித்தே

(ப.ரை) யார் என்னும் - யார் என்ற, வினாவின் கிளவி வினாப்பொருளைத் தரும் சொல், அத்திணை மருங்கில் - உயர்திணையில், முப்பாற்கும் உரித்து - மூன்று பால்களுக்கும் உரியதாம். யார் என்னும் வினாச்சொல் உயர்திணையில் ஆண், பெண், பலர் என்னும் மூன்று பால்களிலும் வரும்.

(வி.ரை) யாஅர் - அளபெடை, யார் என்பதே சொல். இது வினாப்பொருளைத் (கேள்வி) தரும். யார் - உயர்திணை; யாது - அஃறிணை, உயர்திணை யார் என்பது அத்திணைக்குரிய மூன்று பால்களையும் குறித்து வரும். அ-திணை - அத்திணை; இங்கு உயர்திணை.

(எ.டு) அவன் யார் - உயர்திணை - ஆண்பால்
அவள் யார் - உயர்திணை - பெண்பால்
அவர் யார் - உயர்திணை - பலர்பால்
அவன் யார் - இதில் அவன் எழுவாய், யார் - வினைமுற்று (பயனிலை) இது காலம் வெளிப்படக் காட்டாததால் குறிப்பு வினைமுற்றாம்.

## சூத்திரம் 211

பாலறி மரபின் அம்மூ ஈற்றும்
ஆஓ ஆகும் செய்யு ளுள்ளே

(ப.ரை) பால் அறி மரபின் - தெளிவாகப் பாலுணர்த்தும் தன்மையுடைய, அ மூ ஈற்றும் - அம்மூன்று உயர்திணை ஈறுகளிலும் உள்ள, ஆ - ஆ என்னும் எழுத்து, செய்யுளுள் - பாடலில், ஓ, ஆகலும் - ஓவாக மாறுதலும், உரித்து - உண்டு. செய்யுளில் உயர்திணைச் சொல்லின் இறுதியில் நிற்கும் ன், ள், ர் என்னும் மூன்று புள்ளி எழுத்துக்களுக்கு முன் நிற்கும் ஆ என்பது ஓ ஆக மாறுதலும் உண்டு.

(வி.ரை) செய்யுளில் என்றதால் உலக வழக்கில் வருதல் இல்லை என்பது பெறப்படும். ன், ள், ர், என்பவற்றை இறுதியில் உடைய ஆன், ஆள், ஆர் என்றும் ஈறுகள். ஈறு - சொல்லின் கடைசியில் நிற்கும் எழுத்து. அ மூ ஈறு - அம்மூவீறு. உயர்திணையில் ஆண், பெண், பலர் பால்களைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் ஆன், ஆள், ஆர் என்பனவற்றில் உள்ள 'ஆ' - 'ஓ' என மாறுவதும் உண்டு. மாறுவதும் என்று 'உம்' கொடுத்ததால் மாறாமலும் நிற்கலாம் என்பது உணரப்படும்.

(எ.டு) வந்தானை இதில் உள்ள 'ஆ' வந்தோனை என 'ஓ' பெற்றது.

வந்தாளை - வந்தோளை

வந்தாரை - வந்தோரை 'ஆ' 'ஓ' ஆயிற்று

## சூத்திரம் 212

ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்

(ப.ரை) ஆய் என் கிளவியும் - ஆய் என்னும் முன்னிலைச் சொல்லும், அவற்றொடு கொள்ளும் - மேலே கூறப்பட்டவை போன்று செய்யுளில் 'ஆ' - 'ஓ' ஆகும்.

செய்யுளில் முன்னிலை குறித்து வரும். 'ஆய்' என்பதும் மேலே கூறப்பட்டவை போல 'ஆ' என்பது • 'ஓ' ஆகத்திரியும்.

(வி.ரை) அவற்றொடு கொள்ளும் - அவற்றோடு ஒத்தது. கிளவி - சொல். ஆய் - முன்னிலையில் மட்டும் ஈறாய் வரும்.

(எ.டு) 'நின்றாயை (ஆய்) என் சொல்லி வாழ்த்துவனே', - இவ்வடியில் 'நின்றாயை' என்பதில் உள்ள 'ஆய்' செய்யுளாதலின் 'நின்றோய்' என 'ஓ' வாகவும் வரும். நின்றாயை, நின்றோயை - இரண்டும் ஒரே பொருள் தரும் முன்னிலைப் பெயர்களாம்.

## சூத்திரம் 213

(குறிப்புவினை)

அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்என் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பினானும் பண்பி னானும் என்று
அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்

(ப.ரை) அதுச் சொல் வேற்றுமை - 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை, உடைமையானும் - உடைமைப் பொருள் பற்றியும், கண் என் வேற்றுமை - ஏழாம் வேற்றுமை, நிலத்தினாலும் - இடப்பொருள் பற்றியும், ஒப்பினானும் - ஒப்புமைப் பொருள் பற்றியும், பண்பினானும் - பண்புப்பொருள் பற்றியும், அப்பால் காலம் - அப்பகுதியின் காலம், குறிப்பொடு தோன்றும் - குறிப்பால் தோன்றும்.

உயர்திணைக் குறிப்பு வினைமுற்று ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருள், ஏழாம் வேற்றுமை இடப்பொருள், ஒப்புமைப் பொருள், பண்புப் பொருள். ஆகிய அந்த நால்வகைப் பகுதிக்கண்ணும் தோன்றிக் குறிப்பாகக் காலம் காட்டும் என்பதாம்.

(வி.ரை) அதுச் சொல் - அது என்றும் ஆறாம் வேற்றுமை உருபு. கண் - ஏழாம் வேற்றுமை உருபு. நிலம் - இடம் பண்பு - குணம், தொழில். குறிப்பால் தோன்றும் -

காலம் வெளிப்படையாகத் தோன்றாமல் கூறுவோன். குறிப்பின் வழித் தோன்றுதல் (விளக்கம் வினையியல் முதல் சூத்திர உரையில் தரப்பட்டுள்ளது). அஃதாவது, உயர்திணைக் குறிப்பு வினைமுற்று உடைமைப் பொருள் பற்றியும் இடப்பொருள் பற்றியும் ஒப்பு, பண்பு ஆகியவை பற்றியும் தோன்றும் என்பதாம். காலம் வெளிப்படையாகக் காட்டாது.

(எ.டு) கச்சினன் கழலினன் ஆறாம் வேற்றுமை உடைமைப்பொருள். கச்சு - உடை, கழல் - காலில் அணிவது.

இராமன் கச்சினன் - இராமன் கழலினன், இங்கு இராமன் எழுவாய் கச்சினன், கழலினன் வினை முற்றுகள், கச்சினையும் கழலினையும் உடையவன் என்பது பொருள்.

இவ்வினை முற்றுகள் காலம் வெளிப்படையாகக் காட்டாமையால், குறிப்பு வினைமுற்றுகள் எனப்படும்.

அகத்தன், புறத்தன் - இடப்பொருள் தரும் குறிப்பு வினைகள். அகம் - உள்; புறம் - வெளி.

உள்ளே இருப்பவன், வெளியே இருப்பின் எனப் பொருள்படும் அவன் அகத்தன், அவன் புறத்தன் என எழுவாயை (அவன்) விரித்துக் கொள்க.

பொன்னன்னன் - ஒப்புப் பொருள் தரும் குறிப்புவினை

கரியன் - பண்புப் (குணம்) பொருள் தரும் குறிப்பு வினை இவ்வினைமுற்றுகள் எல்லாம் காலத்தைக் குறிப்பால் காட்டின.

## சூத்திரம் 214

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்

(ப.உரை) அன்மை இன்மை உண்மை வன்மை - இவற்றின் அடியாகப் பிறக்கும் வினைகளும், அன்ன பிறவும் - அவை போல்வன பிறவும், குறிப்பொடு கொள்ளும் - குறிப்புப் பொருள் உடைய, என்ன கிளவியும் - எல்லா வினைச் சொற்களும், காலம் குறிப்பு - காலத்தைக் குறிப்பால் உணர்த்துவனவாம்.

அன்மை இன்மை உண்மை வன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் உயர்திணை வினைகள் குறிப்பு வினைமுற்றுகளாம்.

(வி.உரை) அன்மை - அல்லாத தன்மை; இன்மை - இல்லாத தன்மை. உண்மை - உள்ளதன்மை; வன்மை - வலிமை. அன்ன - அவை போன்றன. என்ன - எல்லாம், காலம் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களை குறிப்பு - வெளிப்பாடு இல்லாதது; குறிப்பால் உணரப்படுவது.

(எ.டு) அல்லன், அல்லள், அல்லர் - ஆண், பெண், பலர் பால் (அன்மை)

இலன், இலள், இலர் - (இன்மை)

உளன், உளள், உளர் - (உண்மை)

வல்லன், வல்லள், வல்லர் - (வன்மை)

அல்லன், இலன், உளன், வல்லன் - குறிப்பு வினைமுற்றுகள் (உயர்திணை)

அன்ன பிறவும் என்ற தொடரால், நல்லன், தீயன், உடையன் முதலியனவும் குறிப்பு வினை முற்றுகளாம்.

## சூத்திரம் 215

(குறிப்பு வினைமுற்று ஈறுகள்)

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கில்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே

(ப.ரை) பன்மையும் ஒருமையும் பன்மை, ஒருமைகளான, பால் அறி வந்த - பால்களை உணர்த்தி, அன்ன மரபின் - மேற்கூறிய மரபினால், குறிப்பொடு வரும் - குறிப்புப் பொருள் உணர்த்திவரும், உயர்திணை மருங்கில் - உயர் திணையிடத்து, மேலைக் கிளவியோடு - மேற்கூறிய தெரிநிலை வினையோடு, வேறுபாடு இல - வேறுபாடு இல்லையாம்.

உயர்திணை மருங்கில், பன்மையும் ஒருமையும் பாலறி வந்த மேலைக் கிளவியொடு, அன்ன மரபில் குறிப்பொடு வருஉம் காலக்கிளவி வேறுபாடு இல என்று இச்சூத்திரத்தின் சொற்களை மாற்றி அமைத்துப் பொருள் கொள்ளல் வேண்டும்.

இதனால் பெறப்படுவது ஒருமை பன்மை விளங்கக் குறிப்புப் பொருள் தரும் உயர்திணை வினைச் சொற்கள், அத்திணையின் தெரிநிலை வினைகளோடு ஒக்கும் என்பதாம்.

(வி.ரை) தெரிநிலை - காலம் வெளிப்படையாகக் காட்டும் வினை காலக்கிளவி - வினைச்சொல்; காலம் காட்டுவதால் அப்பெயர் பெற்றது. வேறுபாடு இல - வேறுபடா; ஒக்கும் என்பதாம். மேற்சூத்திரங்களில் உயர்திணைத் தெரிநிலை வினைமுற்றுக்கு உரைக்கப்பட்ட ஈற்றெழுத்துக்களுள் ஏற்புடையவை குறிப்பு வினைமுற்றுக்கும் ஒக்கும் என்பது கருத்து.

(எ.டு) கரியம் (கருமை நிறமுடைய) அம் ஈறு; கரியாம்-ஆம்
கரியெம் - எம்; கரியேம் - ஏம்;
கரியென் - என்; கரியேன் - ஏன்;
கரியன் - அன்; கரியான் - ஆன்
கரியள் - அள்; கரியாள் - ஆள்
கரியர் - அர்; கரியார் - ஆர்

இவ்வாறு தெரிநிலை வினையின் ஈறுகளாகிய அம்முதலிய ஈறுகள் குறிப்புவினைக்கும் ஏற்ற வகையில் வந்துள்ளமை நோக்குக.

## சூத்திரம் 216

(அஃறிணை வினைகள்)

அஆ வஎன வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை

(ப.உரை) அ ஆ வ என வரும் - அகரம் ஆகாரம் பகரஉயிர் மெய்யும் ஆகியவற்றை, இறுதி - இறுதியில் கொண்டு முடியும், அப்பால் மூன்றும் - அப்பகுதியவாகிய மூன்றும், பலவற்றுப் படர்க்கை - பலவின் பால் படர்க்கை இடத்தனவாம்.

அ ஆ ப ஆகிய மூன்றையும் இறுதியில் பெற்று வரும் சொற்கள் அஃறிணைப் படர்க்கைப் பலவின்பால் சொற்களாம்.

(வி.உரை) முன்சூத்திரங்களில் உயர்திணை ஈறுகள் பற்றிப் பேசிய ஆசிரியர் இச்சூத்திரத்தில் அஃறிணைப் பன்மை வினைமுற்றுகள் பற்றிக் குறிப்பிடுகிறார். பலவற்றுப்படர்க்கை - படர்க்கையில் பலவின் பால். அஃறிணையில் ஒன்றன் பால், பலவின் பால் என்று இருபால்களே உள்ளன. ஒன்றன்பால் - அஃறிணை ஒருமை, பலவின் பால் - பன்மை - இடம் மூன்று. அவை, தன்மை, முன்னிலை, படர்க்கை. விள்க்கம் முன்னர்க் கூறப்பட்டது.

(எ.டு) வந்தன, வந்த (அ) - அஃறிணைப் பலவின் பால் வினை முற்றுகள். இம்முற்று வினைகள் முக்காலத்திலும் வரும் வாரா, செல்லா (ஆ) - பலவின்பால் எதிர்மறை. (ஆ) எதிர்மறை உணர்த்தும். உண்ப, வருப - (ப) பலவின்பால்; எதிர்காலம் பற்றிவரும்.

குறிப்பு: 'அ' மூன்று காலத்தும் வரும்; 'ஆ' எதிர்மறை வினையாய் வரும்; எதிர்காலத்தில் பயின்று வரும். இறப்பு, நிகழ்வு காலங்களில் அருகி வரும்.

## சூத்திரம் 217

(ஒருமை வினை)

ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி ஆகும்

(ப.ரை) ஒன்றன் படர்க்கை - படர்க்கை ஒருமை வினை முற்றுகள், தறட ஊர்ந்த - த், ற், ட் என்பனவற்றின் மீது ஏறிவரும், குன்றில் உகரத்து இறுதி ஆகும் - துறுடு என்னும் குற்றியலுகர ஈறுகளைப் பெற்றுவரும்.

து று டு (த்+உ=து; ற்+உ=று, ட்+ உ= டு) ஆகிய மூன்று குற்றிய லுகர ஈறுகளைப் பெற்றுப் படர்க்கை வினைமுற்றுகள் வரும்.

(வி.ரை) குன்றியலுகரம் - குற்றியலுகரம்; ஒருமாத்திரையில் குறைந்து ஒலிக்கும் உகரம். குற்றியலுகரம். அரை மாத்திரை. ஒலிக்கும் த் ற் ட் ஆகிய மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரம் முறையே துறுடு ஆகும். இவற்றை ஈற்றில் பெற்றுப் படர்க்கை அஃறிணை ஒருமை வினைமுற்று (ஒன்றல்பால்) வரும்.

(எ.டு) போனது,

போகின்றது, போவது (து) - முக்காலம் பற்றிய ஒன்றன்பால் முற்றுகள்

போயிற்று - (று) இறந்தகாலம் பற்றி மட்டும் வரும்

பொருட்டு (பொருளை உடையது) (டு) இது குறிப்பு வினைமுற்றில்தான் வரும்.

## சூத்திரம் 218

(அஃறிணைப் பன்மை வினை)

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை அவ்வே

(ப.ரை) பன்மையும் ஒருமையும் - பலவும் ஒன்றும் ஆக, பாலறி வந்த - பால் விளங்குமாறு வந்த, அ மூ இரண்டும் - அம் மூவிரண்டாகிய ஆறு ஈறுகளும், அஃறிணை அவ்வே - அஃறிணை ஈறுகளாம்.

மேற்சூத்திரங்களில் கூறப்பட்ட அ, ஆ, ப, து, று, டு ஆகிய ஆறு ஈறுகளும் அஃறிணைப் பலவின்பால், ஒன்றன்பால் உணர்த்துவன ஆகும்.

(வி.ரை) பன்மை - அஃறிணைப் பலவின் பால்; ஒருமை அத்திணை ஒன்றன் பால். மூவிரண்டு - ஆறு (அ, ஆ, ப என்ற பன்மை குறித்த மூன்றும், து, று, டு என்ற ஒருமை குறித்த மூன்றும் ஆகிய ஆறு ஈற்றெழுத்துகள். பாலறி வந்த - இன்ன பால் என்பதை வெளிப்படையாக உணர்த்தி நிற்கும்.

இதனால், அஃறிணை வினைகள் இந்த ஆறுவகையினவே என்று வரையறை செய்தவாறாம். எடுத்துக் காட்டுகள் முன்னர்த் தரப்பட்டன.

## சூத்திரம் 219

(எவன் என்னும் வினைமுற்று)

அத்திணை மருங்கில் இருபால் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன்என் வினாவே

(ப.ரை) எவன் என் வினா - எவன் என்ற வினாச் சொல் (முற்று), அ-திணை மருங்கில் - அந்த அஃறிணையிடத்துக் குரிய, இரு பால் கிளவிக்கும் - ஒன்றன்பால், பலவின் பால் ஆகிய இருபால்களுக்கும் ஒக்கும் என்ப - உரியது என்பர் ஆசிரியர்.

எவன் என்னும் வினாப் பொருள் தரும் வினைமுற்று அஃறிணை ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய இரண்டினுக்கும் வரும். (எவன் - என்ன, எது) (எ.டு) அஃது எவன்; அவை எவன்.

## சூத்திரம் 220

(அஃறிணைக் குறிப்பு வினை)

இன்றுஇல உடைய என்னும் கிளவியும்
அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதல் கிளவியும்
ஒப்பொடு வருஉம் கிளவியொடு தொகைஇ
அப்பால் பத்தும் குறிப்பொடு கொள்ளும்

(ப.ரை) இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல என்னும் சொற்களும், பண்பு கொள் கிளவியும் - பண்மை ஒட்டி வரும் சொற்களும், உள என்பதும், பண்பின் ஆகிய - பண்பு சார்ந்துவரும் சொற்களும், ஒப்புமைப் பொருள்பட வரும் சொற்களும் ஆகிய, அ பால் பத்தும் - அப்பகுதிப்பட்ட பத்தும், குறிப்பொடு கொள்ளும் - குறிப்புப் பொருள் தரும் வினைச் சொற்களாம்.

(வி.ரை) பண்புகொள் கிளவி - பண்பு (குணம்) அடிப்படையில் பிறக்கும் வினைச்சொற்கள்; பண்பின் ஆகிய சினை முதல் - பண்பு சார்ந்த சினையை (உறுப்பை) ஒட்டிப் பிறக்கும் வினைச் சொற்கள், ஒப்புமைச் சொற்கள் - ஒப்புமை வகையால் வரும் வினைகள். தொகைஇ - கூடி, பால் - பகுதி. சினை - அங்கம் அல்லது உறுப்பு.

(எ.டு) பண்படியாக வரும் அஃறிணை வினைமுற்றுகள் - கரிது (ஒருமை); கரிய (பன்மை) - கரிய நிறத்தன என்பது பொருள்.

பண்புச் சினை முதல் கிளவி (சொல்) - நெடுஞ்செவித்து (நீண்ட செவியுடையது) - (ஒருமை); நெடுஞ்செவிய (பன்மை).

ஒப்பொடு வரும் கிளவி - பொன்னன்னது (ஒருமை); பொன்னன்ன் (பன்மை) - பொன்போன்ற என்பது பொருள்.

இச்சூத்திரம் அஃறிணை வினைமுற்று வகைகளை விவரிக்கிறது. அவ்வினைமுற்றுகளாவன; இன்று, அன்று, உடைத்து - இவை ஒருமைக் குறிப்புவினைமுற்றுகள்.

இல, அல்ல, உடைய, உள, இவை பன்மை குறித்தவை. கரிது, நெடுஞ்செவித்து, பொன்னன்னது - இவை முறையே பண்பும் சினை முதலும் ஒப்புமையும் பற்றி வந்த வினைகள்.

ஆக, இன்று, அன்று, உடைத்து, இல, உள, அல்ல, உடைய, கரிது, நெடுஞ்செவித்து, பொன்னன்னது குறிப்பு வினைமுற்றுகளாம். இவற்றுள் முதல் எழும் தம்மையே (சொற்களையே) உணர்த்தின, ஏனைய மூன்றும் பொருள் உணர்த்தி நின்றன.

## சூத்திரம் 221

(குறிப்பு வினை ஈறுகள்)

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி அஃறிணை மருங்கில்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே

(ப.ரை) அஃறிணை மருங்கில் - அஃறிணையிடத்து, பன்மையும் ஒருமையும் - பலவின்பாலும் ஒன்றன்பாலும் என, பால் அறிவந்த - பால் விளங்குமாறு நின்ற, மேலை கிளவியொடு - மேற்கூறப்பட்ட தெரிநிலை வினைமுற்றுகளோடு, அன்ன மரபின் - முற்கூறிய மரபினால், குறப்பொடு வரும் காலக்கிளவி - குறிப்புக் காலம் உணர்த்தும் குறிப்பு வினைமுற்று ஈற்றெழுத்துக்கள், வேறுபாடு இல - வேறுபாடு உடையன அல்ல.

அஃறிணையில் தெரிநிலைமுற்று ஈற்றெழுத்களாகக் கூறப்பெற்றவற்றினின்று, குறிப்புவினைமுற்று ஈறுகள் வேறுபட்டன அல்ல என்பது கருத்து.

(வி.ரை) முன்சூத்திரங்களில் அஃறிணைத் தெரிநிலை வினைமுற்று ஈற்றெழுத்துக்களாகக் கூறப் பெற்றவை அ,ஆ,வ,து,று என்பவையாகும். இவ்வெழுத்துக்களுள் பொருந்துவன குறிப்பு வினைமுற்றுகளின் ஈற்றிலும் வரும் என்பதாம். அஃதாவது, குற்றுகர ஈறுகளாகிய தும், றும், டும், என்னும் மூன்றும் அகரமும் ஆம். ஆ, வ - இவ்விரண்டும் குறிப்பு வினைக்கண் பொருந்தி வாரா. இவை குறிப்பில் காலம் உணர்த்தும். வேறுபாடில் - பொருந்திவருவன.

எடுத்துக்காட்டுகள் மேலைச் சூத்திரங்களுக்குத் தரப்பட்டவையே. காலக்கிளவி - குறிப்பால் காலம் உணர்த்தும் வினைச் சொற்கள். அன்ன மரபு - காலம் வெளிப்படக் காட்டும் தெரிநிலை வினைமுற்றின் தன்மை.

(தொடரும்)

# சிறியகள், பெரியகள் - ஒரு சிந்தனை

- வித்துவான் க.கதிரேசன்

"உண்ணற்க கள்ளை" என்கிற கட்டளை பிறந்த போதும், அதனை உண்டு களித்த காலம் சங்க காலம். சங்கச் செய்யுட்கள் இதற்குச் சான்று. "சிறியகள் பெறினே..... (புறம்235) என்று தொடங்கும் பாடலில் வந்துள்ள சிறியகள், பெரியகள், என்பனபற்றிய ஒரு சிந்தனையே இக்கட்டுரை.

"சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தாம் மகிழ்ந்து உண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன்மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே ......."

என்று இப்பாடல் தொடர்கிறது

இப்பகுதிக்குரிய பழைய உரை வருமாறு:

"சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின் எங்கட்குத் தருவான்; அது கழிந்தது! பெரிய அளவினையுடைய மதுவைப் பெற்றானாயின் அதனை யாமுண்டு பாட, எஞ்சிய மதுவைத் தாம் விரும்பி நுகர்வான்; அது கழிந்தது! சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவுடைய சோற்றின் கண்ணும் மிகப்பல கலத்தோடு உண்பான்; அது கழிந்தது! மிக்க அளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப்பல கலத்தோடு உண்பான்; அது கழிந்தது" என்பதாகும்.

பண்டைத் தமிழ் நூல்களுக்கு அமைந்துள்ள உரைகளும், திணை, துறைப்பாகுபாடுகளும் கிடைத்தற்கரிய பெருங் கருவூலங்களாகும். அவை இன்றேல் நாம் குன்று முட்டிய குருவி போல இடர்ப்பட வேண்டும்.

இவ்வுரையின்படி, சிறிதளவு கள் பெறின் ஔவையும் பிறரும் உண்பர், பெரிதளவு கள் பெறின் ஔவையும் பிறரும் உண்டு பாட, அதியன் மகிழ்ந்து எஞ்சிய கள்ளை உண்பான் என்று ஆகிறது.

ஆனால் பாடலின் நேர்பொருள் காண முற்படின், சிறிய கள்ளை ஔவையும் பிறரும் உண்டனர், பெரிய கள்ளை ஔவையும் பிறரும் பாட அதியன் மட்டுமே உண்டான் என்று அமையும்.

பழைய உரையில் "அதனை (பெரியகள்ளை) யாமுண்டு பாட, எஞ்சிய" என்கிற தொடர்கள் வருவித்துரைக்கப் பெற்றுள்ளன.

இங்ஙனம் வருவித்துரைக்க நேர்ந்ததேன்? காரணம், அதியனின் இயல்பான பகுத்துண்ணும் பண்பே என்பதை "சிறுசோற்றானும். . . மன்னே. . . . . மன்னே" என்கிற அடிகள் வலியுறுத்துவதால், அக்கருத்தின் தாக்கம் "பெரியகள். . . . . மன்னே" என்கிற அடிகளின் உரையில் காணப் பெறுகிறது எனலாம்.

மேலும், சிறுசோறு - சிறிய அளவினையுடை சோறு பெருஞ்சோறு - பெரிய அளவினையுடைய சோறு என்பதன் தாக்கம் சிறிய கள், பெரியகள் என்பதிலும் அமைந்துவிட்டது எனலாம்.

சிறியகள், பெரியகள், என்பனவற்றுக்கு வேறு பொருள் காணவியலுமா? என்பதே நம் சிந்தனைப் போக்கு.

கள் பற்றிக் குறிப்பிடும் சங்கப்பாடல்கள், அக்கள்ளின் விளைச்சல் - முதிர்ச்சி பற்றிக் குறிக்கின்றன.

"விளையல் வெங்கள்" - புறம் 212:2
"முதுகள்" - புறம் 258:9

பன்னாள் பக்குவப்பட்ட கள்ளே விளைகள், முதுகள் என்று குறிக்கப்படுவதை உணரலாம். இவ்வகைக் கள், கடுகடுப்பு மிக்கதாய் இருக்கும் அதன் முதிர்ச்சிக்கு ஏற்ப என்பதை,

"இன்கடுங் கள்ளின் அஃகுதைதந்தை" - குறுந் 298:5
"இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர் கொற்றச் சோழர்" - நற்றிணை 10:5-6

என்கிற பகுதிகள் உரைக்கும். இவற்றின் கடுகடுப்பு எத்தகையது?

> "தேள்கடுப் பன்ன நாட்படு தேறல்" - புறம் 372:16
> "அரவு வெகுண்டன்ன தேறல்" - புறம் 376:14
> "பாம்பு வெகுண்டன்ன தேறல்" - சிறுபாண் 237

முதலியன நாட்படு கள்ளின் கடுகடுப்பு எத்தகையது என்பதைக் குறிப்பனவாகும். தேள், பாம்பு தீண்டினாற் போன்றது அக்கடுகடுப்பு என்பதை இவற்றால் அறிய முடிகிறது.

ஔவை பாடிய புறப்பாடிலில் வரும் பெரியகள் என்பது முற்குறித்த நாட்படுகளே என்று கொள்வதில் தவறில்லை. நாட்படு தேறலின் கடுகடுப்புக் காரணமாகவே ஔவையும் பிறரும் அதனை நுகராமல் பாடினர் என்றும் எண்ணலாம்.

கடுகடுப்புடையகள், விளையல் வெங்கள்ளாயின்; விளையாத கள்ளும் உண்டு என்று கொள்ள வேண்டியுள்ளது. விளைச்சலே - நாட்படுதலே கடுகடுப்புக்கு காரணமாதலின் புதியகள் அத்துணைக் கடுகடுப்பில்லாத என்பது அமையும். இத்தகு புதுக்கள்ளை, புறம் 384 ஆம் பாடல் குறிக்கிறது.

> விடிவு இன்றாயினும் உழவர் மண்டை
> இருங் கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
> - அடி 9 - 10

கள்ளுண்ணும் கலத்தில் - மண்டையில் - கெடிற்றுமின் உணவும், பூங்கள்ளும் - மென்மையான கள்ளும் - இருந்தன என்பதை இது வலியுறுத்தும்". இப்பூங்கள், கடுகள்ளுக்கு எதிரிடையானது - மிகச்சிறிய அளவே கடுப்புடையது, புளிப்புடையது.

இத்தகு பூங்கள்ளை ஔவை போன்ற சான்றோர் பருகியிருத்தல் கூடும் என்று கொள்வது பொருத்தமா? என்பது சிந்தனைக்குரிய வினா. ஏனெனில் இத்தகு பூங்கள் உழவர்க் குரியதாக, வீரர்க்குரியதாகக் குறிக்கப் பெறுகிறது இப்பகுதியில்.

ஆயின், ஔவையும் பிறரும் மட்டுமே உண்ட, அதியன் உண்ணாத சிறியகள் எது?

சுண்ணாம்பிட்டுப் புளிப்பேற்றம் படாமல் செய்த கள்ளைச் சிறியகள் எனலாம். அதுபதநீர் என்று இன்று வழங்கப் பெறுகிறது. இதில் இனிமையுண்டு, புளிப்பில்லை, கடுப்பும் இல்லை. இப்பதநீரும் ஒருவகைக் கள்ளே என்பதை

பதநீர் - சுண்ணாம்பிட்டுப் புளிப்பேற்றப் படாமல் செய்த கள் - மதுரைத் தமிழ்ச் சங்கம் பேரக. தொகுதி - 2 (பக் 120)

தெளிவாக உரைக்கிறது. எனவே ஔவையும் பிறரும் உண்டது சிறியகள் (பதநீர்) - இது இவர்கள் நிலைக்கு ஏற்றது. அதியன் மட்டும் உண்டது பெரியகள் - நாட்படுதேறல். இது இவன் நிலைக்கு ஏற்றது என்று கொள்ளலாம் என்பது சிந்தனைக்கு உரியது.

ஒருவன் சிறையை விட்டு வெளிவந்த பின்னர்தான், சிறை வாழ்வின் கொடுமை தொடங்குகிறது. (குற்றவாளிகள் தண்டனை அனுபவித்து விடுதலை ஆனபின், அவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப் படுகிறார்கள் என்பது இதன் பொருள்)

- ஆசுகார் ஒயில்டு

# மக்கள் நல அரசு

- நா.பா

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இன்றைய உலக அரசியலில் சில ஆட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களின் குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்தி விளம்பரம் தேட முயல்வதைப் பார்க்கிறோம். மக்களாட்சி அமைப்பில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தலில் பங்கு கொள்வது இயல்பு. யாதானும் ஒரு கட்சிப் பெரும்பான்மை வலிமை பெற்று ஆட்சி அமைப்பதும், மற்றக் கட்சிகள் எதிர்க்கட்சிகளாகச் செயல்படுவதும் கண்கூடு. பாராளுமன்ற நடைமுறை அரசியலில் (Parliamentary System of Democracy) ஆட்சி ஓச்சும் கட்சியின் குற்றங்களையும் குறைகளையும் சட்டமன்றங்களில் எடுத்துக்காட்டித் திருத்த முயல்வது. எதிர்க்கட்சிகளின் கடமையாகும். இவ்வாறு ஆக்கமான முறையில் ஆட்சியாளரின் செயற்பாடுகளைத் திறனாய்வு செய்து பேசுதலும் எழுதுதலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அரசியல் நடைமுறையாகும். ஆனால் பெரும்பாலும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புக் கட்சிகளாகவே மாறிவிடுகின்றன. இவ்வாறு எதிரும்புதிருமாகச் செயல்படும் போது நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் நெகிழ்ச்சியடைந்து விடுகின்றன. வேண்டத்தகாத பகைமை உணர்ச்சிதான் எஞ்சும்.

பிறர்குற்றம் குறைகளை எடுத்துக் காட்டும் கட்சிகள் தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அவ்வகைக் குற்றங்களைத் தாமே புரிவது பெரும்பாலான இன்றைய அரசியல் கட்சிகளின் நடைமுறையாகி விட்டது. திருவள்ளுவர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சில எச்சரிக்கைகளை விடுத்துள்ளார். அஃதாவது, "முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர் குற்றம் காண வல்லனாயின், அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது என்றவாறு" என்று பொருள்படும்படி

"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு"

என்று அருளியுள்ளார். மேலும் விளக்குமுகத்தான் பரிமேலழகர், "அரசனுக்குத் தன் குற்றம் கடியாவழியே பிறர் குற்றம் கடிதல் குற்றமாவது, கடிந்த வழி முறை செய்தல் ஆம் என்பார் 'என்குற்றம்' என்றார். எனவே, தன் குற்றம் கடிந்தவனே முறை செய்தற்கு உரியவன் என்பதாயிற்று" என்று விரித்துரை செய்துள்ளார். ஆட்சியில் இருப்பவன் செய்த குற்றத்தைக் கண்டிக்கும் எதிர்க்கட்சியாளன், தானும் ஆட்சி செய்யும் போது அவ்வகைக் குற்றத்தை மீண்டும் செய்யாமை வேண்டும் என்பதாம். மக்களிடையே அக்கட்சிக்கு இச்செயல் நல்லெண்ணைத்தையும் ஆதரவையும் விளைவிக்கும்.

மிகப் பெரிய மற்றொரு குற்றம் ஆள்வோரிடம் இருத்தல் கூடாது என்பார் திருவள்ளுவர். அஃதாவது, ஆட்சியாளர் பொதுவாக, தம் பதவிக் காலத்தில் சில சிறப்பு வசதிகளைப் பெறும் நிலையில் உள்ளவர்கள். அவர்கள் நாட்டில் எப்பகுதிக்குச் சென்றாலும் மக்கள் வரவேற்புக்கும் புகழ்ச்சிக்கும் ஆட்படுவோர் ஆவர். அன்றியும் சிற்சில பொருள்களின் மேல் அவர்களுக்குப் பற்று ஏற்படுவது இயல்பு. அவர்கள் எவ்வெப் பொருள்களைப் பெரிதும் விரும்புவார்கள் என்பது பகைவர்க்கும் பிறர்க்கும் தெரிதல் கூடாது. அங்ஙனம் பிறர் தெரிந்து கொள்ளுமாறு தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்தினால் அவற்றின் வாயிலாக எதிரிகள் அவர்களைத் தம்பயப்படுத்தித் தகாத காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். இச்செயல் ஆட்சியாளரைக் கெடுப்பதுடன் நாட்டுக்கு சில சமயங்களில் பெரிய இடர்ப்பாடுகளை ஏற்படுத்திவிடும் என்பதனைத் திருவள்ளுவர் குற்றம் கடிதல் என்ற அதிகாரத்தில்,

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்"

என்னும் குறட்பாவாயிலாக எச்சரித்துள்ளார். இக்குறளுக்குப் பரிமேலழகர், "தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதல் அறியாமல் அனுபவிக்க வல்லனாயின், பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம் என்றவாறு"

என்று பொருளுரைத்து, மேலும் விளக்குவாராய் "அறிந்த வழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமல் உய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படான் என்பதாம். காமம், வெகுளி, உவகை என்பன முற்றக்கடியும் குற்றமன்மையின், இதனால் பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மையவற்றிற்குப் பொது வகை விலக்கினையே கொண்டொழிந்தார்" என்று விரித்துரைப்பாராயினர். இனி மணக்குடவரும் பரிப்பெருமாளும், "காதலிக்கப்பட்ட யாவற்றின் மேலும் செல்லும் காதலைப் பிறரறியாமல் செலுத்துவனாயின், பகைவர் இவனைக் கொல்லுமாறு சிந்திக்கும் சிந்தனை இவன் மாட்டுச் செல்லாது, அயலாம் என்றவாறு," என்று விளக்கியுள்ளமை காண்க. மேலும், இன்பத்துக்கு மாறாகாத பொருள்கள் மேற் செல்லும் ஆசையைப் பிறர் அறியின், அதுவே வாயிலாக வஞ்சிப்பர்; ஆதலான், அக்காதலை அடக்காமையும் குற்றமென்று கூறப்பட்டது" என்பாராயினர். இங்குக் 'காதல்' என்பது பற்றுள்ளம் அல்லது ஆசை எனப் பொருள்படும்.

## ஆளப்படுவோர் (மக்கள்) தகுதிகள்:

மக்கள் நல அரசு, அமைய வேண்டுமாயின், ஆள்வோர் தகுதியுடையோராக இருந்தால் மட்டும் அமையாது. ஆளப்படும் மக்களும் (வாக்காளரும்) சில இன்றியமையாத் தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும். கடமையுணர்வும் நாட்டுப்பற்றும் பொறுப்புணர்ச்சியும் மக்களுக்குத் தேவையானவை. மக்களாட்சி (Democracy) என்ற நாணயத்திற்கு இவ்விருசாராரும் (ஆள்வோரும் ஆளப்படுவோரும்) இரு பக்கங்களாவர். மக்கட் பண்புகளைத் திருவள்ளுவர் பல்வேறு அதிகாரங்களில் பல்வேறு சூழல்களில் வெளிப்படுத்தியுள்ளார். பொதுவாக, இல்லறவியலில் இல்வாழ்க்கை முதல் புகழ் ஈறாக உள்ள இருபது அதிகாரங்களில் மக்களின் கடமைகளையும் (Duties) பொறுப்புக்களையும் (Responsibilities) உடன்பாட்டு வகையாலும் எதிர்மறை வகையாலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வற்புறுத்தியுள்ளார். பின்வரும் பண்புகள் மக்களுக்கு இன்றியமையாதன:

113471

1) குடிமைப்பண்பு - ஒரு[illegible]ந்த இல்வாழ்க்கை
2) ஒழுக்கமுடைமை - சமுதாயத்தில் நடந்து கொள்ளும் முறை
3) ஒப்புரவறிதல் - சேவை மனப்பான்மை, உதவும் தன்மை
4) பயனில் சொல் பாராட்டாமை - பொருளற்ற பேச்சில் ஈடுபடாமை
5) தீவினை அச்சம் - பிறர்க்குக் கேடு செய்வதற்கு அஞ்சுதல்
6) இன்னா செய்யாமை - சமுதாயத்தீமைகளை விலக்கல்
7) பொருள் செயல் - உழைத்து பொருளைத் தேடவேண்டும் என்ற நெஞ்சமுத்தம்

இவை தவிர வேறு சில பண்புகளும் பேசப்பட்டுள்ளன.

குடும்பங்களாகவும் சமுதாயத்தின் அங்கங்களாகவும் அமைந்து வாழும் மக்கள் தத்தம் குடும்பத்தில் ஈடுபாடு கொண்டு ஆற்ற வேண்டிய கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும். கணவன் மனைவி உறவும் மக்களைப் பேணி வளர்த்தலும் இல்லறத்தாரின் தலையாய கடமை. இதனை அரசு செய்துவிட முடியாது. மக்களை அறிவுடையவர்களாக்குவதும் நல்வழிப் படுத்துவதும் பெற்றோர் கடமையாகும். தாம் தாம் பிறந்த குடும்பத்தின் நற்பெயருக்குக் களங்கம் வாராவகையில் செயல்பாடுகளை அமைத்துக் கொள்ளல் வேண்டும். குடும்பம் நல்ல குடும்பம் என மதிக்கப்பட வேண்டுமாயின், அக்குடும்ப அங்கத்தினர்களாகிய தாய் தந்தை மக்கள் ஆகிய முத்திறத்தோரும் ஒருமித்துப் பணியாற்றல் வேண்டும். அரசு இதனைச் சாதித்தல் முடியாது.

அன்றியும் மக்கள் பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாக நடந்து கொள்ளல் வேண்டும். அரசு எத்துணைக் கட்டுப்பாடுகளை விதித்தாலும் அல்லது சட்டங்கள் இயற்றி அவற்றை நடைமுறைப் படுத்தினாலும், மக்கள் தாமாகவே திருந்தினாலன்றி முழுச் சீர்திருத்தம் ஏற்படாது. எந்த அரசும் படித்தவர்கள் எல்லோர்க்கும் அரசுப் பணிகளை அளித்துவிட முடியாது. படித்தவர்கள் அரசினையே முற்றிலும் எதிர்பார்த்து நில்லாமல் தம்மளவில் முயன்று பொருளீட்டல் வேண்டும். திருவள்ளுவர்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

என்று அறிவுறுத்துவது காண்க. இவ்வாறு ஈட்டப்படும் பொருளைத் தானும் துய்த்துச் சமுதாயத்தில் தன்னினும் தாழ்ந்துள்ள ஏனைய எளிய மக்களுக்கும் கொடுத்தல் வேண்டும். சிலர் செல்வத்தை ஈட்டுவததோடு அமைதி கொண்டு, அச்செல்வத்தைச் சமுதாய நன்மைக்கும் தொழில் வளர்ச்சிக்கும் முதலீடு செய்யாமல் வறிதே முடக்கி வைக்கும் வன்கணாளரைத் திருவள்ளுவர் மிகுதியும் கடிந்து கொண்டுள்ளார். அத்தகைய செல்வம் (பயன்படாத செல்வம்) அரசினாலும் பிறராலும் எடுத்துக் கொள்ளப்படும் நிலைமை ஏற்பட்டுவிடும் என எச்சரித்துள்ளார்.

"அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்"

என்பது அக்குறள். இத்தகைய செல்வத்தை நன்றியில் செல்வம் என்பர் அறிஞர். அஃதாவது உடையானுக்கும் சமுதாயத்திற்கும் எவ்வகையிலும் பயன்படாத செல்வம் என்பதாம். மேலும் திருவள்ளுவர் இவர்களைச் சமூக விரோதிகள் என்றும் இவர்கள் உயிரோடு உலாவினாலும் செத்தவர்களாகவே அறிஞர்களால் கருதப்படுவார்கள் என்றும் மிகவும் சினந்து கூறுகிறார். இக்கருத்தப்படுவரும்,

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்"

இத் திருக்குறள் சிந்திக்கத் தகும். அஃதாவது, 'தன்மனையகமெல்லாம் நிறைதற்கு ஏதுவாகிய பெரும் பொருளை ஈட்டி வைத்து உலோபத்தால் அதனை உண்ணாதவன் உளனாயினும் செத்தானாம், அதன்கண் அவனால் செயக்கிடந்ததோர் உரிமை இன்மையின் என்றவாறு' என்று இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை கண்டுள்ளார். காளிங்கர் என்பார் இக்குறளுக்கு விளக்கம் தருமுகத்தான், வாய்ப்பு அமைந்த பெரும் பொருள் ஈட்டி வைத்தான் யாவன்; அவன் அதுகொண்டு அனுபவியானாகில் அவன் செத்தவனே என்பதனால் அவன் வேறு நடைப்பிணமே; என் எனின், பிணமும் தான் அறிந்து ஒன்று செய்யப்படுவதோர்

செய்தி இல்லை, இவனும் அன்னன் ஆகலான். இவன் தன் குறிப்பினால் ஒரு செய்தி செயக்கிடந்து இல்லை" என்று கூறியுள்ளமை அறியத்தகும். இதனால் நாட்டில் வாழும் மக்கள் பொருளீட்டும் ஆள்வினை உடையராயிருத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு ஈட்டிய பொருளைச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் செலவழித்தல் வேண்டும் என்பது புலப்படும்.

திருக்குறளில் ஒழிபியல் பகுதி குடியியல் எனவும் கருதப்படுவதுண்டு. குடிமை (அதி. 96) தொடங்கி கயமை (108) ஈறாக உள்ள 13 அதிகாரங்களும் சிறப்பாக மக்களின் கடமைகளை விவரிக்கின்றன. குடிமை, குடிசெயல்வகை, பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை, முதலியன மக்கள் பெற்றாக வேண்டிய சில முக்கிய பண்புகளை விரித்துக் கூறுகின்றன.

## குடியாட்சிக் கோட்பாடுகள்:

திருவள்ளுவர் காலத்தில் முடியாட்சியே நிலவியது. ஆயினும், இன்றைய குடியாட்சிக்குரிய சில கருத்துக்களும் கொள்கைகளும் திருக்குறளில் காணப்படுகின்றன. அவை நன்கு சிந்திக்கத் தக்கவை. குறிப்பாக, தேர்தல்கள் நடைபெறும்போது எத்தகைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பது பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் வள்ளுவர் கூறியுள்ளார். அக்காலத்தில் இன்று நடப்பது போன்ற தேர்தல்கள் இல்லை என்பது உண்மை. ஆனால் அவர் வெளியிட்டுள்ள சில கருத்துக்கள் இன்றைய வாக்காளர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாகும். ஆட்சிப் பீடம் ஆள்வோரும் சார்பாளரும் பின்வரும் இன்றியமையாப் பண்புகள் உடையவராயிருத்தல் வேண்டும்.

1. நற்குடிப்பிறப்பு
2. கல்வியறிவு
3. அவாவின்மை
4. அன்புடைமை
5. மக்கட்பண்பு முதலியன

இவையேயன்றித் திருக்குறளில் பல்வேறு இடங்களில் அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள கடமைகளுக்கும் விதிமுறைகளும் மக்களுக்கும் பொதுவாகப் பொருந்தும் என்பது அறியத்தகும். சில பிரிவினருக்குச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ஏனையோர்க்குப் பொதுவகையில் பொருந்துமாறு திருவள்ளுவர் அறம் வகுத்துள்ளார் என்பது நினைவுகூரத் தகும்.

## தேர்தல்களும் திருக்குறளும்:

திருக்குறளில் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் (அதிகாரங்கள் 51&52) என்னும் இரண்டு அதிகாரங்கள் அரசியல் பகுதியில் அமைந்துள்ளன. மிகவும் இன்றியமையாத அதிகாரங்கள் அவை. அரசன் எவ்வாறு தன் அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்? எத்தகையவர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்? என்பன பற்றி விரிவான கருத்துக்களும் நெறிகளும் அடங்கிய அதிகாரங்கள் அவை. இவை முடியாட்சியில் மன்னனுக்குரியனவாக அமைக்கப் பட்டிருப்பினும் இவ்வதிகாரங்களில் உள்ள இருபது குறட்பாக்களின் கருத்துக்களும் செய்திகளும் இன்று குடியாட்சி அமைப்பில் ஒரு தலைமை அமைச்சர் எத்தகைய பிற அமைச்சர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதும் தேர்வு செய்யப் பெற்ற அமைச்சர்களுக்கு எத்தகைய துறைகள் எவ்வாறு எவ்வடிப்படையில் ஒதுக்கப்படல் வேண்டும். என்பதும் வியக்கத்தக்க முறையில் கூறப்பட்டுள்ளன. திருவள்ளுவரின் கூர்த்த அரசியல் மதி நுட்பத்திற்கு இவை சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். அன்றியும் இன்றைய அரசியல் உலகில் ஒவ்வொரு மக்களாட்சி அமைப்பிலும் குறிப்பிட்ட காலக்கட்டங்களில் நடைபெறும் பொதுத் தேர்தல்கள் (General Election) காலத்தில் மக்களாகிய வாக்காளர் யார் யாரை எத்தன்மையினரை - தம் சார்பாளராக (Representatives) அல்லது சட்டமன்ற., பாராளுமன்ற உறுப்பினராகத் (Members of legislatives or Parliament) தெரிந்தெடுத்தால் பயனுள்ளதாக அமையும் என்பன போன்றவற்றிற்கு அரிய வழிகாட்டுதல்களாகவும் இவ்வதிகாரங்கள் அமைந்துள்ளன.

மக்கள் நல அரசு அமைதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகள் ஒழுக்கமுள்ளவராகவும், கல்வியாளராகவும், மதி நுட்பம் உடையவர்களாகவும், மக்கட் பண்பும் அன்பும் பெற்றோராகவும் இன்னபிற நல்லியல்புகள் அமையப் பெற்றோராகவும் அமைவது இன்றியமையாததாகும். மக்கள் எப்படியோ, அப்படித்தான் அரசும் அமையும். மக்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உறுப்பினர்களைப் பொறுத்துத்தான் எத்தகைய அரசு அமையும் என்று கூற முடியும். மக்களின் பல்வேறு வாழ்வியற் கூறுகள் நலம் பெறவும், அவர்களின் வாழ்க்கையில் பல்வேறு நலங்கள் கொழிக்கவும் நல்ல ஆட்சி அமைப்பும் அதனைக் கொண்டு நடத்தும் திறமையான ஆட்சியாளரும் காரணமாவர். எனவேதான் இவ்விரு அதிகாரங்களும் ஆட்சியாளர்க்கும் மக்களுக்கும் ஒருங்கே இன்றியமையா வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

(தொடரும்)

சுதந்திரத்திற்கு முன் நம் நாட்டில் 19 பல்கலைக் கழகங்கள்: மாணவர் தொகை இரண்டு இலட்சம். இன்று 220 பல்கலைக் கழகங்கள்; 8200 கல்லூரிகள். மாணவர் தொகை 50 இலட்சத்திற்கு மேல்.

# நாவின் சோம்பல்

- புலவர். மா. சின்னு

மனிதன் எளிய நெறியைப் பின்பற்றுதலையும் அரியநெறியைக் கைவிடுதலையும் பண்டும் இன்றும் காண்கிறோம். சுற்று நெறியைவிடச் சுருக்கு நெறியையே கால் நாடுகிறது. மனிதனுடைய நாவும் நாவைச் சார்ந்த பிற உறுப்புகளும் எளிய நெறியிலேயே செல்ல முற்படுவதை எழுத்திலக்கணம் உணர்ந்தார் நன்கு அறிவர். படித்தான் என்பதைவிடப் படிச்சான் என்பதே எளிமையாகிவிட்டது. இவ்வாறு எளிய நெறியைப் பின்பற்றுவதை நாவின் சோம்பல் என்று குறிப்பிடலாம். நாவின் சோம்பலால் பழைய சொற்களில் சில மறைந்து புதிய சொற்கள் பிறக்கின்றன. சாம்பல், சாம்பர் ஆனதற்குக் காரணம் இலக்கணக் கட்டளையன்று; நாவின் கட்டளையே. 'ஞ' என்பது ஒலிப்பதற்குக் கடினமாக இருத்தலையும் 'ந' என்பது ஒலிப்பதற்கு எளிமையாக இருத்தலையும் உணர்ந்த தொல்காப்பியரே இனிது பிறக்கும் தகாரம் நகாரம்' என்று, 'இனிது' என்னும் அடைமொழியைக் கொடுத்திருக்கிறார். நாவின் சோம்பலால் உண்டான சில சொற்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

## குரீஇ:

பறவைகளில் ஓர் இனம் குருவி. சங்க காலத்தில் இக்குருவி அளபெடை பெற்று 'குரீஇ' என்று வழங்கப்பட்டது.

> நிரைபறைக் குரீஇ யினம் - அகநா. 303:11
> குன்றத் திருந்த குரீஇ - புறநா. 19:8
> மனையுறைக் குரீஇ - புறநா. 318:4

இங்ஙனம் வழங்கப்பட்ட குரீஇ அளபெடையாக இருந்ததால் நாவிற்குச் சோம்பல் ஏற்பட்டபோது, அது 'குருவி' என்று பேசத் தொடங்கியது. குரீஇ - இயற்கையளபெடை என்பர் இலக்கண உரையாசிரியர். வழக்கிற்கும் செய்யுட்கும் பொதுவாக வருவன இயற்கையளபெடை. எடுத்துக்காட்டு ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை, குரீஇ. புலவர்கள் செய்யுளோசை நிறைத்தற் பொருட்டுச் செய்து கொண்ட அளபெடை 'செயற்கையளபெடை' எடுத்துக்காட்டு; ஓஒதல் வேண்டும்; கெழீஇக் கொளல் வேண்டும்.

சங்கப்பாடல்களில் 'குருவி' என்ற சொல்லாட்சியைப் பெரும்பாலும் காணமுடியாது. எங்கோ சில பாடல்களில் அருகிய வழக்காகவே வருகிறது.

குருவி யார்ப்பக் குரல் குவிந்தன - பரிபா. 18:47
இருவி இருந்த குருவி வருந்துற - ஐங். 294:4

சங்கப் புலவர் சிலரின் நாவிற்கு ஏற்பட்ட சோம்பலால் குருவி பிறந்தது; குரீஇ பறந்து மறைந்தது. நச்சினார்க்கினியர் போன்றவர்கள் 'குரீஇ யோப்புவாள்' (தொல் எழுத்: 140) குரீஇ (தொல். எழுத்: 144) என்று எடுத்துக் காட்டுத் தந்து காப்பாற்ற முயன்றும் முடியவில்லை.

## ஞாண், ஞெண்டு, ஞிணம்

இன்று நாண் (கயிறு நூல்), நண்டு, நிணம் என்று பேசுகிறோம். ஆனால், பண்டைக் காலத்தில் இவை ஞாண் ஞெண்டு, ஞிணம் என்று பேசப்பட்டுள்ளன.

சாவ நோன்ஞாண் - புறநா. 14:9
வில்லினது வலியநாண் - பழைய உரை
மூன்றுபுரி நுண்ஞாண் - திருமுரு. 183
புரிமூன்றாகிய நுண்ணிய பூணுநூல் - நச்சர் உரை
ஞாண்பொர விளங்கிய வலிகெழு தடக்கை
- பதிற்90:33
ஞாண் - கயிறு என்ற பொருளில் வந்தது
நோன்ஞாண் வினைஞர் - அகநா. 186:2
வலிய தூண்டிற் கயிற்றினை உடைய மீன்பிடிப்போர்

மேற்கண்டவாறு 'ஞாண்' என்றே சங்கப்புலவர் பலரும் பேசினர் மிகச் சிலரின் நாவிற்குச் சோம்பல் வந்தது

நாக நாணா மலைவில் லாக பரிபாடல். 5:24
வாசுகி நாணாக இமயம் வில்லாக
- பரிமேலழகர் உரை
நெடுங்கழைத் தூண்டில் நடுங்கக நாண் கொளீஇ
பெரும்பா - 285

நெடிய மூங்கிற் கோலைத் தலையிலே வலித்துக் கட்டின கயிற்றினிடத்தே தூண்டஇலைக் கொளுத்தி - நச்சர்உஜ என்று ஞாண் என்பதில் உள்ள முதல் எழுத்தை நீக்கி 'நா' சேர்த்து

நாண் என்று பாடத் ஒடங்கினர் இன்று அரைஞாண் என்பது 'அரைநாண்' ஆகி, 'அரணாக்கயிறு' ஆகிவிட்டதைக் காண்கிறோம்.

புலவர் பலரும் 'நாண்' என்று கூறாமல் 'ஞாண்' எனக் கூறியது என்? நாண் என்றால் நாணம் என்ற பொருளைத் தந்துவிடும்; (குன்று*அம்*குன்றம் ஆனாற் போல நாண் என்பது அம் சாரியை பெற்று நாணம் ஆகிறது) பொருள் மயக்கம் ஏற்படும் என்பதற்காகவே 'ஞாண்' என்று வழங்கினர். நாவின் சோம்பலால் ஞாண் என்பது நாண் ஆகியது. இதனால் இடனறிந்து பொருள் கொள்ளும் இடர்ப்பாடு ஏற்பட்டுவிட்டது.

நீர்வாழ் உயிரினங்களுள் ஒன்றாகிய நண்டு பண்டைக் காலத்தில் 'ஞெண்டு' என்றே வழங்கப்பட்டது அலவன் (குறுந் 328) களவன் (ஐங்.30) குளிறு (குறுந்த.24) என்று பல பெயர்களைப் பெற்று இது.

எக்கர் ஞெண்டின் இருங்கிளை - நற். 267:2
வேப்புநனை அன்ன நெடுங்கண் ஈர்ஞெண்டு
அகநா. 178:8

ஞெண்டின் சிறு பார்ப்பு - பெரும்பா. 167 என்று சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்டது. ஆனால் பிற்கால இலக்கியங்களில் புலவர்கள்

சேற்று நண்டு சேற்றில்வளை
ஏற்ற டைக்குதே - முக்கூடற்பள்ளு: 35

நண்டு உகிர் உற்றென் நடுங்கி சீவகசிந்: 1443 என்று பாட, ஞெண்டு போய் நண்டு வந்துவிட்டது. மக்கள் நாவிலும் நண்டு மட்டுமே நடக்கத் தொடங்கிவிட்டது.

உடம்பில் புண் ஏற்பட்டால் 'ரணமாகிவிட்டது' என்கிறோம். இந்த ரணமும் ஒரு வரலாற்றைப் பெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இது ஞிணம் என்ற பெரைப் பெற்றிருந்தது. புறநானூற்றில் (177:14) ஞிணம் என்று தான் குறிப்பிடப்பட்டது. இந்தச் சொல்லும் "இழுதின் அன்ன வால்நிணம் செருக்கி" (மலைபடு; 244) என்றும் வழங்கப்பட்டுள்ளது. இன்று ஞிணம் மறைந்து நிணம் இலக்கிய வழக்கில் மட்டும் நிற்க, பேச்சு வழக்கில் ரணம் ஆட்சி செலுத்தும் நிலை ஏற்பட்டுவிட்டது.

ஞாண் ஞெண்டு ஞிணம் இவற்றில் இருந்த ஞகாரம் துரத்தப்பட்டு, அவ்விடங்களை நகாரம் பற்றிக் கொண்டது; இதற்குத் தொல்காப்பியர் கூறும் எழுத்துகளின் பிறப்பியலையும் ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் பிறப்பியல் முறையைக் கூறுகிறார். அவற்றுள் ஞகாரம் பிறக்கும் முறையைப் பின்வருமாறு கூறுகிறார்.

சகார ஞகாரம் இடைநா அண்ணம் பிறப்பியல்:8

சகாரமும் ஞகாரமும் நாவின் இடையும் மேல்வாயின் இடையும் பொருந்தப் பிறக்கும் என்கிறார். நகாரத்தின் பிறப்பை

அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்கும் தகார நகாரம் பிறப்:11

மேல்வாயைச் சேர்ந்த பல்லினது, அடியாகிய இடத்தே நாவினது நுனிப்ரந்து சென்று தன் வடிவு மிகவும் பொருந்தும்படி சேர, தகாரம் நகாரம் என்ற இரண்டும் இனிதாகப் பிறக்கும் என்கிறார்.

நாவின் இடையும் மேல்வாயின் இடையும் பொருந்திப் பிறக்கும் ஞகாரத்தில் இனிமையில்லை; சிறிது கடினத்தன்மை உச்சரிக்கும் போது ஏற்படுகிறது; ஆனால், நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடியிடத்தைப் பொருந்தும் போது எளிமை இருப்பதால் நகாரம் "இனிது பிறக்கும்" என்று தொல்காப்பியரே கூறியுள்ளதால் புலவர்களில் சிலர் ஞாண் ஞிணம் ஞெண்டு என ஒலிப்பதில் சிறிதளவு சிரமம் உள்ளதென்று நாண் நிணம் நண்டு என்று எளிமையாக ஒலிக்கத் தொடங்கிவிட்டனர். மக்களும் பேச்சு வழக்கில் இப்புலவர்களைப் பின்பற்றினர். அதனால் ஞாண் ஞிணம் ஞெண்டு இம்மூன்றும் இன்று அருஞ்சொற்களாகிவிட்டன.

இதனால், நாண் - நூல் அல்லது கயிறு என்ற பொருள் தருவதுடன் நாணம் என்கிற பொருளையும் தருகிறது. இடனறிந்து இச்சொல்லிற்குச் சிறிது இடர்ப்பட்டுப் பொருள் காண வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அம் சாரியை கொடுத்து (நாண்+அம்) நாணம் என வழங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## முன்னர், பின்றை:

பின், முன் என்பன வினையெச்சங்களுள் ஒரு வகையாகும். தொல்காப்பியரும் வினையியலில் (31)

பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மாபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே

என்றார். 'பின் - முன் கால் கடை வழி இடம் ஆகிய ஆறும் வினையெச்ச வாய்பாடுகளாகக் குறிக்கப்பெறினும், அவை காலம் இடம் ஆகிய பொருள்களைத் தரும் தனிச் சொல்லியன்கள் அல்லது பெயர்களாகத் தோன்றுகின்றன' என்பர் மொழியியலார். முன், பின் என்பன காலம், இடம் ஆகிய பொருள்கள் தரும் என்கிற கருத்து, புறக்கணிக்காமல் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

தொல்காப்பியர் 'பின்னர்' என்னும் பொருள் தரும் 'இம்பர்' என்ற சொல்லையும் 'முன்னர்' என்ற பொருள் தரும் 'ஞாங்கர்' என்ற சொல்லையும் பயன்படுத்தினார்.

நெட்டெழுத்து இம்பர் ஒத்தகுற் றெழுத்தெ மொழிமரபு:8
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே உயிர்மயங்:2

இலக்கிய வழக்கில் "ஞாங்கர், குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்" என்று பெரும்பாணாற்றுப் படையில் (196, 197) ஞாங்கர் - மேல் என்ற பொருளில் வாக்காணலாம். தொல்காப்பியர் "யாழ என்னும் புள்ளி முன்னர் என்று முன்னர் என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். "பிறக்கு ஒழிய" பின்னே கிடக்க என்று பொருள் தந்ததால் பிறக்கு இடப்பொருள் உணர்த்திவரக் காணலாம்.

பின்னர், முன்னர் என்பன முறையே பின்பு, முன்பு என இக்காலத்தில் வழங்கப்படுகிறது. சங்க காலத்தில் முன்பு வலிமை என்ற பொருளில் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

காய்சின முன்பு - மதுரைக்: 691

எரிகின்ற சினத்தை உடைத்தாகிய வலி - என்பது நச்சர் உரை பின்பு என்ற சொல் அன்று வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை. இப்பொருள் தரும் 'பின்றை' இருந்திருக்கிறது.

# உன்னத உடல் நலம்
# உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம்: மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

**மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்**

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை-625 107. போன்:536361-68
Fax: 536353 E-mail: mmhrc @ md2.vsnl.net.in